**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 320/2020 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.2 |
| Name : | திரு. இந்திரராஜ் |
| Father's Name/Husband Name: | திரு. சுந்தரராஜ் |
| Village : | நெற்குணம் |
| Taluk : | வேப்பந்தட்டை |
| Age : | 64/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 13.11.2025

**(1969-ம் ஆண்டின் 54வது விதியில் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் 1 முதல் 3 வரை ஆஜர் இல்லை அவர்களுக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது )**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 சோபியா என்பவரை தெரியாது. எதிரிகளையும் தெரியாது. எதற்காக இந்த வழக்கு போட்டுள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது**

**அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.சா.1 மற்றும் எதிரிகளை எனக்கு தெரியும் என்றும், வழக்கிற்காக தெரியாது என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலிசார் என்னை விசாரித்தனர் என்றும், கடந்த 2019ம் வருடம் எனது மூத்த மகன் விக்னேஷ்ற்கு அ.சா.1 சோபியா என்பவரை திருமணம் செய்வதாக முடிவு செய்து வெற்றிலை பாக்கு மாற்றிக் கொண்டோம் என்றும் கடந்த 13.05.2019 அன்று நானும் எனது மனைவியும்

வீட்டிலிருந்த போது மதியம் சுமார் 1 மணியளவில் எதிரி வினோத்குமார் எங்கள் வீட்டிற்கு வந்து அவரது செல்போனில் அ.சா.1ன் போட்டோவைக் காட்டி தானும் அ.சா.1ம் இரண்டு வருடங்களாக பழகி வந்ததாகவும், அ.சா.1 வினோத்குமாரை ஏமாற்றிவிட்டு என்னுடைய மகனை திருமணம் செய்து கொள்ளப்போவதாக சொல்லி அவரது செல்போனில் வினோத்குமாரும் சோபியாவும் சேர்ந்து எடுத்துக் கொண்ட போட்டோக்களை என்னிடம் காட்டினார் என்றும், அது குறித்து நான் எனது மைத்துனர் சீனிவாசனுக்கு தகவல் சொல்லி 14.05.2019 அன்று நானும் எனது மைத்துனர் சீனிவாசனும் காருக்குடி என்ற ஊரில் எதிரி வினோத்குமாரை சந்தித்து பேசியபோது எதிரி வினோத்குமார் சோபியாவுடன் சேர்ந்து எடுத்துக் கொண்ட போட்டோக்களை எங்களிடம் காட்டினார் என்றும், நாங்கள் சோபியாவின் நெருங்கிய உறவினர்களிடம் சென்று திருமணத்தில் விருப்பம் என சொல்லி திருமண ஏற்பாடுகளை நிறுத்திவிட்டோம் என்றும் எதிரி வினோத்குமார் மீது அ.சா.1 அளித்த புகார் சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்த போது நான் வாக்குமூலம் அளித்தேன் என்றால் சரியல்ல. தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

**எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை என்று பிரதிநிதித்துவம் செய்யப்பட்டது. அதனால் குறுக்கு விசாரணை இல்லை.**

**மறு விசாரணை : இல்லை**

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.